## வாக்குமூலம்

## கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

## வழக்கு எண். SC No.105/2025

## வழக்கு சாட்சி: P.W.3

## தேதி: 19.12.2025

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | சேகர் | **ஜாதி:** | |
| த. பெயர் : | | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது:** | |

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)**

**முதல் விசாரணை:**

நான் நாட்டாகுடியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 வள்ளியை தெரியும். அ.சா.1 வள்ளியின் கணவர் கணேசன். கணேசன் தற்போது இறந்துவிட்டார். எதிரி குண்டுமணிக்கும் கணேசனுக்கும் தண்ணீ வரவில்லை என்று பிரச்சனையாக இருந்தது. எங்கள் ஊரில் அய்யனார் கோவில் கும்பாபிஷேகம் போன வருஷம் நடந்தது. கும்பாபிஷேகம் நடப்பதற்கு முன்பு பிள்ளையாரை டபக்கென்று தூக்கி எதிரி குண்டுமணி தூக்கி சமுதாய கேணியில் போட்டுவிட்டார். பிறகு விசாரித்து பிறகு வேறு பிள்ளையாரை வைத்து கும்பாபிஷேகம் நடத்தினோம். அதன் பிறகு 48 நாள் பூஜை செய்வதற்கு ஆரம்பமானது. குண்டுமணிக்கும் கணேசனுக்கும் பிரச்சனை ஓடிகொண்டே இருந்தது. 48 நாள் பூஜை நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு விடியற்காலை 5.00 மணி இருக்கும். நான் டீக்குடிப்பதற்காக கணேசன் டீக்கடைக்கு போனேன். அப்போது குண்டுமணி அருவாளை எடுத்துகொண்டு ஊரை ரவுண்டு வந்துகொண்டிருந்தார். ஆட்கள் அரண்டு போய் வரவில்லை. ஆட்களெல்லாம் போனால் வெட்டுவான் என்று வீட்டை பூட்டிகொண்டார்கள். நான் டீக்கடைக்கு போவதற்கு முன்பு குண்டுமணி கணேசனை வெட்டி ரோட்டில் போட்டுவிட்டார். நம்மள் நின்றால் நம்மளுக்கும் சிக்கல் என்று நான் பாஸ் ஆகி போய்விட்டேன். குண்டுமணி ஒரு பைக்கில் வெட்டிவிட்டு பைக்கில் போய்விட்டார். நான் ஒன்றும் செய்யவில்லை. அதன்பிறகு ஆட்கள் கூடிவிட்டார்கள்.



P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2025.12.19 18:59:48 +0530

போலீசார் என்னை விசாரித்தார்.

சாட்சியை பகுதியை பிறழ் சாட்சியாக விசாரிக்க வேண்டும் என்று அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னை போலீசார் விசாரித்த போது எங்கள் ஊரில் சின்டெக்ஸ் டேங்கை எதிரி உடைத்துவிட்டார் என்றும் அந்த உடைத்ததை ஏன்டா உடைத்தாய் என்று கணேசன் சத்தம் போட்டார் என்று சொன்னேன் என்றால் சரிதான். கணேசனை குண்டுமணி நீ கும்பாபிஷேகம் நடத்திவிட்டாய் 48 நாள் மண்டல பூஜை எப்படி நடத்துவாய் என்று மிரட்டினான் என்றால் சரிதான். 04.11.2024ம் தேதி காலை 5.15 மணிக்கு நான், கனகசபாபதி, ராமலிங்கம் ஆகிய மூன்று பேரும் டீக்கடைக்கு டீக்குடிக்க போய் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது கணேசனும், அவரது மனைவி வள்ளியும் வந்து டீக்கடையில் லைட் போட்டு திறந்தார்கள் என்றும், அப்போது அங்கு வந்த குண்டுமணி கணேசனை பார்த்து ஏன்டா தேவிடியா பயலே, சொல்ல சொல்ல கும்பாபிஷேகத்தை நடத்திவிட்ட உயிரோடு இருந்தா தான்டா மண்டல பூஜை நடத்துவ என்று சொல்லி முதுகில் வைத்திருந்த அருவாளை வைத்து கணேசனை மாறி மாறி வெட்டினார் என்று போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். அதன் பிறகு 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து 108 ஆம்புலன்ஸில் வந்தவார்கள் கணேசன் இறந்துவிட்டார் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு பிரைவேட் ஆம்புலன்ஸில் கணேசன் உடலை சிவகங்கை மருத்துவமனைக்கு கொண்டு போனார்கள் என்று போலீசார் விசாரணையில் சென்றேன் என்றால் நானும் உடன் சென்றேன். கணேசன் மனைவி திருப்பாச்சேத்தி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:00:00 +0530

எதிரி தூக்கி போட்டதாக சொல்லும் பிள்ளையார் எத்தனை அடி உயரமானது என்றால் 2 அடி உயரம். பிள்ளையார் சிலை கல் பிள்ளையார் என்றால் சரிதான்.

பிள்ளையார் சிலை பதிக்கப்பட்டது இருந்தது என்றால் சரிதான். சமுதாய கேணிக்கும், பிள்ளையார் கோவிலுக்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் அரை பர்லாங். சமுதாய கேணி கண்மாய் நடுப்பகுதியில் இருக்கிறது என்றால் கரை ஓரத்தில் இருக்கிறது. கண்மாயில் முழுவதும் தண்ணீர் இருந்தது என்றால் சரிதான். என் வீட்டிற்கும் டீக்கடைக்கும் எவ்வளவு துரம் இருக்கும் என்றால் இடையில் சுமார் 10 வீடு இருக்கும். கணேசன் பால் மாடு வைத்திருக்கிறாரா என்றால் இல்லை. அவருக்கு டீக்கடைக்கு ஒட்டி மட்டும் வீடு இருக்கிறதா என்றால் வேறு வீடுகள் இருக்கிறதா என்றால் டீக்கடையை ஒட்டி ஒரு வீடு தான் இருக்கிறது, வேறு வீடு இல்லை. குண்டம் வைத்து தான் கும்பாபிஷேகம் நடந்தது என்றால் சரிதான். அய்யர் வைத்து யாகம் வளர்க்கப்பட்டதா என்றால் அய்யர் வைத்து யாகம் வளர்க்கப்பட்டது. சின்டெக்ஸ் டேங்க் உடைக்கப்பட்டது சம்பந்தமாகவும், பிள்ளையார் சிலையை தூக்கி போட்டது சம்பந்தமாகவும் போலீசாரில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கும்பாபிஷேகம் நடந்ததற்கு நாடகம் நடத்தினோமா என்றால் நடத்தினோம். கும்பாபிஷேக அன்று இரவு நாடகம் நடந்தது என்றால் சரிதான். அன்றையதினம் போலீஸ் பாதுகாப்பு கேட்டு போலீசார் வந்திருந்தார்களா என்றால் வந்திருந்தார்கள். அந்த சமயத்தில் எதிரி சின்டெக்ஸ் டேங்க் உடைத்தது சம்பந்தமாக பிள்ளையார் சிலையை தூக்கி போட்டது சம்பந்தமாகவோ ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் அது பெரிதுபடுத்தவில்லை. கணேசன் இறப்பதற்கு முதல் நாளில் இருந்தே எதிரி மது அருந்திவிட்டு அருவாளை வைத்து சுத்தி கொண்டிருந்தாரா என்றால் முதல் நாள் பார்க்கவில்லை, அதற்கு முதல் நாள் சத்தம் போட்டுகொண்டிருந்தான். அந்த சத்தம் போட்டது சம்பந்தமாக எங்கள் ஊரிலிருந்து புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. எதிரி கணேசனை அருவாளால் வெட்டவில்லை என்றும் எங்கள் ஊரில் உள்ள இரண்டு சமூகங்களுக்கிடையே உள்ளாட்சி தேர்தல் சம்பந்தமாக முன்விரோதம் இருந்த காரணத்தினாலும், பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் சம்பந்தமாக வரி வசூல் செய்வது சம்பந்தமாகவும், ஏற்பட்ட முன் விரோதத்தின் காரணமாக கொலை செய்யப்பட்டார் என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட புகாரில் போலீசார் சொல்லி கொடுத்தற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன்



P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:00:51 +0530

என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

P
PARTHASARATHY
Digitally signed by
P
PARTHASARATHY
Date: 2025.12.19
19:01:03 +0530

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC No.105/2025**

**வழக்கு சாட்சி: P.W.2**

**தேதி: 19.12.2025**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | ராமலிங்கம் | **ஜாதி:** |
| கணவர் பெயர் **:** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)**

**முதல் விசாரணை:**

நான் நாட்டாகுடியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 வள்ளியை தெரியும். அ.சா.1 வள்ளியின் கணவர் கணேசனை தெரியும். எங்கள் ஊரில் அய்யனார் கோவில், விநாயகர், கோவில், லட்சுமி நரசிம்மர் பெருமாள் கோவிலில் கும்பாபிஷேகம் செப்டம்பர் 7.8.2024 ம் தேதி நடந்தது. கும்பாபிஷேகத்தில் எதிரி என்னை முதலில் கூப்பிடவில்லை என்று கணேசன் கூட கும்பாபிஷேகத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு தகராறு நடந்தது. அதன் பிறகு நான்கு நாட்கள் கழித்து விநாயகர் சிலையை எதிரி சமுதாய கேணியில் தூக்கி போட்டு விட்டார். அதற்காக காவல்நிலையத்தில் கிராமத்தில் எல்லோரும் சேர்ந்து திருப்பாச்சேத்தி காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தோம். எதிரி நான் தான் தூக்கி போட்டேன் என்று ஒத்துகொண்டான். பிறகு விநாயகரை தூக்கி கும்பாபிஷேகம் நடத்தினோம். அதன் பிறகு தண்ணீர் மினி டேங்கை குண்டுமணி கும்பாபிஷேகத்திற்கு பிறகு இரவில் உடைத்து விட்டார். அதை நான் தான் உடைத்தேன், தண்ணீர் வரவில்லை என்று எதிரி குண்டுமணி சொன்னார். தலைவர் கணேசன் குண்டுமணியை கூப்பிட்டு கேட்டதற்கு நான் தான் உடைத்தேன் எனக்கு தண்ணீர் வரவில்லை. கணேசன் தண்ணீர் வரவில்லை என்றால் கிராமத்தில் கேட்கவேண்டும் ஏன் உடைத்தாய் என்று கேட்டார். அதன் பிறகு நவம்பர் மாதம் 4 ம் தேதி விடியற்காலை 5.00 மணியிலிருந்து 5.30 மணிக்குள் நான், கனகசபாபதி மற்றும் சேகர் டீக்குடிக்க



P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:01:38 +0530

கணேசன் கடைக்கு போனோம். அப்போது கணேசனும், அவரது மனைவியும் நடந்து வந்துகொண்டிருந்தார்கள். கணேசன் வந்து லைட்டை போட்டார். அவருடைய மனைவி கூட்டுவதற்காக வந்தார். நாங்கள் அந்த கடை பக்கத்திலேயே நின்று பேசிக்கொண்டிருந்தோம், தீ பத்த வைக்கவில்லை. எதிரி குண்டுமணி பைக்கில் வந்து நின்றார். குண்டுமணி நீ கும்பாபிஷேகத்தை நடத்திவிட்டாய், 48 நாள் மண்டல பூஜையை எப்படி நடத்துவாய் என்று பார்க்கிறேன் நீ உயிருடன் இருந்தால் தானே நடத்துவ அப்படி சொன்ன சொல்லோடு பின்னாடி இருந்த அருவாளை கணேசனை குண்டுமணி வெட்டினான். நாங்கள் ஓடி போய் பிடிக்க போனோம், எதிரி அருவாளை தூக்கி உங்களையும் இதை போல் வெட்டுவேன் என்று சொன்னான். அத்துடன் எதிரி வண்டியை எடுத்துகொண்டு போய்விட்டான். நாங்கள் 108 ஐ வர சொன்னோம். 108 வந்து பார்த்துவிட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். பிறகு ஆம்புலன்ஸ் வரச்சொல்லி ஆம்புலன்ஸ் வந்து சிவகங்கைக்கு தூக்கி கொண்டு போனார்கள். பிறகு வள்ளியும் அவரது மகளும் புகார் கொடுக்க திருப்பாச்சேத்தி காவல்நிலையத்திற்கு போனார்கள். நாங்கள் சிவகங்கை பெரிய ஆஸ்பத்திரிக்கு போனோம். எதிரி 1 1/2 நீளமுள்ள மரக்கைப்பிடி போட்ட அருவாளால் வெட்டினார். சா.பொ.ஆ.1 அருவாள் தான் எதிரி வெட்டிய அருவாள். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் நாட்டாகுடியில் குடியிருந்து வருகிறேன். அங்கு டீக்கடை அ.சா.1 மட்டும் வைத்திருக்கிறாரா அல்லது வேறு யாரும் வைத்திருக்கிறார்களா என்றால் அவர்கள் மட்டும் வைத்திருக்கிறார். நான் இறந்துபோன கணேசனின் சகோதரர் என்றால் சரிதான். தண்ணீர் தொட்டி மற்றும் சின்டெக்ஸ் ஆகியவற்றை உடைத்ததற்காக புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. எதிரி என்ன வண்டியில் வந்தார் என்றால் ஸ்கூட்டி. அந்த வண்டி எதிரியின் வண்டியா என்றால் தெரியாது. எதிரி சம்பவத்திற்கு முன்னர் கோயம்புத்தூரில் வேலை செய்தது தெரியுமா என்றால் தெரியும். அங்கு எத்தனை ஆண்டுகள் வேலை செய்தார் என்று தெரியுமா என்றால் போவார் வருவார் மாதம் ஒரு முறை வருவார். கோயம்புத்தூரில் எதிரி ஒரு திருமணம் செய்து அங்கு ஒரு குழந்தை இருக்கும் விரபம் தெரியுமா என்றால் தெரியும். கும்பாபிஷேகத்திற்கு ஒரு வீட்டிற்கு



P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2025.12.19 19:01:49 +0530

எவ்வளவு வரி போட்டோம் என்றால் ரூ.5,000/-. எதிரியிடம் வரி வாங்கினீர்களா என்றால் என் அண்ணனுக்கு தான் தெரியும். திருவிழாவிற்கு ஒரு கமிட்டி நியமிப்பார்கள் என்றால் சரிதான். அந்த கமிட்டியில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் கமிட்டி நியமிக்கவில்லை, இரண்டு பேர் தான் பார்த்தார்கள். அதில் ஒருவர் கணேசன், மலைராசு. அந்த மலைராசு எனக்கு சொந்தக்காரரா என்றால் அவர் வேறு ஜாதி. பைப் உடைத்தது சம்பந்தமாக பஞ்சாயத்து தலைவியிடமோ, பஞ்சாயத்து யூனியன் இடமோ மனு ஏதாவது கொடுத்தோமா என்றால் கொடுக்கவில்லை. எங்கள் ஊருக்கு செல்வதற்கு இரண்டு வழிகள் இருக்கிறது என்றால் சரிதான். ஒன்று நல்லாகுளம் வழியாகவும், மற்றொன்று படமாத்தூர் வழியாகவும் வரலாம் என்றால் சரிதான். எதிரி எந்த வழியாக வந்தார் என்றால் படமாத்தூரிலிருந்து நல்லாகுளம் வழியாக வந்தார். படமாத்தூர் செல்வதற்கு நல்லாகுளம் வழியாகசெல்வது குறைந்த துாரமா எங்கள் ஊரிலிருந்து நேரடியாக செல்வது குறைந்த தூரமா என்றால் படமாத்தூர் வழியாக போனால் பக்கம், நடந்து தான் போகவேண்டும், பைக் போகாது, ரோடு வழி போகவேண்டும் என்றால் நல்லாகுளம் வழியாக போகவேண்டும். கோவில் அமைந்துள்ளது நல்லாகுளம் வழியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். சாட்சி பாலு எங்கள் ஊரில் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். அவர் என்ன வேலை செய்கிறார் என்றால் ஐல்லி லோடு மேன். அவர் தினமும் எத்தனை மணிக்கு வேலைக்கு போவார் என்றால் காலை 4.00 மணிக்கு போவார். லாரியில் வேலை செய்கிறாரா, குவாரியில் வேலை செய்கிறாரா என்றால் லாரியில் லோடு மேனாக வேலை செய்கிறார். எந்த லாரியில் வேலை செய்கிறார் என்றால் யார் கூப்பிட்டாலும் போவார். இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரி நாட்டாகுடி ஊருக்கு எப்போது வந்தார் என்றால் கும்பாபிஷேகம் டைம்மில் வந்தார். திரும்பி எப்போது சென்றார் என்றால் போகவில்லை. நான் அந்த ஊரிலேயே இல்லை என்றும், திருப்பாச்சேத்தியில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் திருப்பாச்சேத்தியில் தான் வசித்து வந்தேன் என்றும் என் அண்ணன் இறந்த சேதி கேட்டு தான் மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் இறப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு எதிரிக்கு விபத்து ஏற்பட்டு வலது காலில் பிளேட் வைத்திருக்கும் விபரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரியால்



P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:02:02 +0530

வேகமாக நடக்கவோ, ஓடவோ, உட்கார்ந்து எழுந்திருக்கவோ இயலாது என்பது தெரியுமா என்றால் நன்றாக நடப்பார், போவார். போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்த போது வேறு எப்போவாதது விசாரித்தார்காள என்றால் இல்லை. எங்கள் ஊரில் கும்பாபிஷேகம் நடத்துவது சம்பநத்மாக எங்கள் சமுதாயத்திற்கும், யாதவர் சமுதாயத்திற்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றும் , வரி வசூல் செய்வதில் ஏறபட்ட முன் விரோதம் காரணமாக யாதவர் சமுதாயத்தை சேர்ந்த 4, 5 நபர்கள் என் சகோதரர் கணேசனை வாள் போன்ற ஆயுதத்தால் குத்தி கொன்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரி குடித்துவிட்டு ஊரில் அசிங்கமான வார்த்தைகளை திட்டி வருவார் என்பதால் எதிரி மீது சந்தேகப்பட்டு எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, காவல்துறையினர் சொல்லி கொடுத்ததன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. யாதவர் சமுதாயமும், எங்கள் சமுதாயத்திற்கும் பஞ்சாயத்து தலைவர் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாகும் பல ஆண்டுகளாக முன் விரோதம் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:02:13 +0530

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC No.105/2025**

**வழக்கு சாட்சி: P.W.1**

**தேதி: 19.12.2025**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | வள்ளி | **ஜாதி:** |
| கணவர் பெயர் **:** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)**

**முதல் விசாரணை:**

நான் நாட்டாகுடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வீட்டு குடித்தனம். ஆஜர் எதிரியை தெரியும். எதிரி எங்கள் ஊர்க்காரர். இந்த வழக்கில் இறந்துபோன கணேசன் என் கணவர். எனக்கு கண்ணன், ராஜாத்தி, வனிதா ஆகிய மூன்று குழந்தைகள். நானும், என் கணவரும் நாட்டாகுடியில் பிள்ளையார் கோவில் மந்தை அருகில் டீக்கடை வைத்திருந்தோம். எங்கள் ஊரில் மகாகணபதி, லட்சுமிநரசிம்மர், கருவாழுடைய அய்யனார் கோவில் என்று மூன்று கோவில்கள் இருக்கிறது. அந்த மூன்று கோவில்களிலும் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு ஒரு குழு அமைத்து அந்த குழுவில் அந்த கணவரை தலைவராக நியமித்தார்கள். கும்பாபிஷேகம் செப்டம்பர் 07, 08 2024ம் தேதி சிறப்பாக நடந்தது. அந்த கும்பாபிஷேகம் நடப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு பிள்ளையார் சிலையை தூக்கி எங்கள் ஊர் கண்மாய்க்குள் இருக்கும் சமுதாய கிணற்றிற்குள் போட்டு விட்டார்கள். யார் என்று விசாரித்ததில் காத்தான் மகன் குண்டுமணி, அவனுடன் இன்னும் இரண்டு பேர் சேர்ந்து மூன்று பேர்கள் போட்டது விசாரித்ததில் தெரிய வந்தது. என் கணவருக்கும், குண்டுமணிக்கும் ஏன்டா போட்டா என்று விவகாரம் நடந்தது. கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள் ஊருக்குள் வரும் தண்ணீர் டேங்கை உடைத்து, சின்டெக்ஸையும் குண்டுமணி உடைத்துவிட்டான். அதனால் ஏன்டா இப்படி உடைத்தாய் என்று என் கணவர் தண்ணீர் டேங்க் அருகே வைத்து காலை 10.00 மணிக்கு உடைத்த போதே கேட்டதற்கு,



P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:02:22 +0530

எனக்கு நீ கும்பாபிஷேகம் நடத்துவது பிடிக்கவில்லை அப்படி தான் செய்வேன் என்று சொன்னான். இதுபோல் எந்நேரமும் விவகாரம் நடந்துகொண்டிருந்தது. நீ கும்பாபிஷேகத்தை நடத்திட்டேன்டு தெனாவெட்டா இருக்கியா, மண்டல பூஜையை எப்படி நடத்துவாய் என்று பார்க்கிறேன் என்று என் கணவரிடம் மண்டல பூஜை நடப்பதற்கு கொஞ்ச நாள் முன்பு என் கடை அருகே காலை 10.00 மணிக்கு குண்டுமணி கேட்டான். உன்னைய அதுக்குள்ள என்ன நடத்துறேன் பாரு என்று எந்த நேரமும் விவகாரம் நடந்துகொண்டிருந்தது. 04.11.2024 ம் தேதி நானும், என் கணவரும் காலை 5.15 மணிக்கு கடை திறக்க வந்தோம். கடையில் நான் கூட்டிக்கொண்டு இருந்தேன், என் கணவர் கடையை திறக்க வந்திருந்தார். வீதி லைட் எரிந்து கொண்டிருந்தது. என் கணவர் கடையில் லைட்டை போட்டார். அப்போது குண்டுமணி ரோட்டில் நின்றுகொண்டிருந்தார். அப்போது என் கணவர் என்னடா இப்படி நிக்கிற என்று கேட்டதற்கு, நீ கும்பாபிஷேகத்தை நடத்திட்டேம்டு தெனாவெட்டா இருக்கியா மண்டல பூஜையை எப்படி நடத்துவ, நீ உயிரோடு இருந்ததா தானா செத்து தொலைடா என்று முதுகுக்கு பின்னால் இருந்த அருவாளை எடுத்து என் கணவரை சரமாரியாக வெட்டினார். நான் கத்தவும், பக்கத்தில் இருந்த என் கணவர் ராமலிங்கம், மருமகன் கனகசபாபதி, எங்கள் ஊரை சேர்ந்த சேகர் மூன்று பேரும் டீக்குடிக்க வந்தவர்கள் ஓடிவந்தார்கள். குண்டுமணி கிட்ட வந்தாள் எல்லாத்தையும் வெட்டிவிடுவேன் என்று சொன்னான். அவர்கள் பயந்துகொண்டு நின்றுவிட்டார்கள். குண்டுமணி ஸ்கூட்டியில் ஏறி போய்விட்டான். நான் என் கணவரை தூக்கி பார்த்தேன். என் கணவர் ரத்த வெள்ளத்தில் இருந்தார். அங்கிருப்பவர்கள் 108 க்கு போன் செய்தார்கள். 108 வந்து பார்த்துவிட்டு என் கணவர் இறந்துவிட்டார் என்று சொன்னார்கள். 108 ஆம்புலன்ஸ் போய்விட்டார்கள். என் கணவரை பார்த்த போது வலது பக்க மார்பில் ஒரு வெட்டு, இடது பக்க மார்பில் ஒரு வெட்டு, இடது பக்க அக்கில் விலாவில் ஒரு குத்து, இடது பக்க முதுகில் ஒரு வெட்டு இருந்தது. நானும், என் மகள் ராஜாத்தியை கூட்டிக்கொண்டு திருப்பாச்சேத்தி காவல்நிலையத்திற்கு காலை 7.00 மணிக்கு போனேன். அங்கு SI இருந்தார். நான் சொல்ல சொல்ல என் மகள் புகார் எழுதி நானும், என் மகளும் கையெழுத்து போட்டு SI யிடம் புகாரை கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள



P
PARTHASARATHY
Digitally signed by
P
PARTHASARATHY
Date: 2025.12.19
19:02:30 +0530

கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு **அ.த.சா.ஆ.1**. பிறகு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு போனேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார். அந்த அருவாள் எதிரி வெட்டிய சுமார் 1 ½ அடி நீளமுள்ள அருவாள். என்னிடம் காண்பிக்கப்படும் அருவாள் தான் எதிரி குண்டுமணி வெட்டிய அரிவாள். அந்த அருவாள் **சா.பொ.ஆ.1**.

__எதிரி தரப்பு குறுக்கு விசாரணை__

என்னுடைய மூன்று பிள்ளைகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். என்னுடைய இரண்டு பெண் குழந்தைகள் இருவரையும் சிவகங்கையில் திருமணம் செய்து கொடுத்து அவர்கள் அவர்களது கணவர்களுடன் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் கணவர் இறந்த காலக்கட்டத்திலும் என் பெண் குழந்தைகள் சிவகங்கையில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். என் மகன் என் கணவர் இறந்த சமயத்தில் சிவகங்கையில் தான் குடியிருந்தார் என்றால் சரிதான். என் கணவர் இறந்த சம்பவத்தை போனில் சொல்லி தான் அவர்களை வரவழைத்தேன் என்றால் சரிதான். அவர்கள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் காலை 5.45 மணிக்கெல்லாம் வந்துவிட்டார்கள். என் மூத்த மருமகன் CRPF ல் வேலை செய்கிறான். இரண்டாவது மருமகன் சிவகங்கையில் பைனான்ஸில் மேனேஜராக வேலை செய்கிறான். எங்கள் ஊரில் எங்கள் ஜாதியை சேர்ந்தவர்கள் எத்தனை குடும்பங்கள் வசிக்கிறார்கள் என்றால் 40 குடும்பம் இருக்கும். எதிரி எங்கள் ஊரில் எங்கு வசிக்கிறார் என்றால் ஊரில் ஆரம்பத்திலேயே வீடு இருக்கிறது அங்கு வசிக்கிறார். எதிரி ஜாதியை சேர்ந்தவர்கள் 10 குடும்பம் எங்கள் ஊரில் இருக்கிறார்கள். எங்கள் ஊரில் யாதவர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் எத்தனை குடும்பம் இருக்கிறார்கள் என்றால் நிறைய குடும்பங்கள் இருக்கிறது. எங்கள் ஊர் எந்த ஊர் பஞ்சாயத்து என்றால் மாத்தூர் பஞ்சாயத்து. மாத்தூர் பஞ்சாயத்து தலைவர் எந்த சமுதாயத்தை சார்ந்தவர் என்றால் அகமுடையார் சமுதாயத்தை சேர்ந்தவர். என் கணவரை மருத்துவமனைக்கு யார் கொண்டு சென்றார்கள் என்றால் என் மகனும், ஒரு ஓய்வு பெற்ற போலீஸும் கொண்டு சென்றார்கள். போலீசார் நேரடியாக ஆஸ்பத்திரிக்கு வந்துவிட்டார்கள். நான் 11ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். என் மகள் ராஜாத்தி M.Com படித்திருக்கிறார். மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு போனீர்கள் என்றால்



P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:02:41 +0530

காலை 8.00 மணி இருக்கும். நான் மருத்துவமனைக்கு போன போது எனக்கு தெரிந்த நபர்கள் யார்யார் இருந்தார்கள் என்றால் என் மகள் ராஜாத்தி, வனிதா, சம்பந்தக்காரர் பஞ்சவர்ணம், V.R.பாண்டி, சேகர், மலைராஜ், பொன்னம்பலம் இன்னும் நிறைய பேர் வந்திருந்தார்கள். என் மருமகன் கனகசபாபதி, என் கொழுந்தனார் ராமலிங்கம், என் ஊரை சேர்ந்த சேகர், என் ஊரை சேர்ந்த மாரியம்மாள், எங்கள் ஊரை சேர்ந்த முத்துக்குமார், கண்ணன், என் மகள் ராசாத்தி, வனிதா, பாலு, போஸ், செல்வம், ரவி, பிரபு ஆகிய அனைவரும் மருத்துவமனையில் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் பார்க்கும் போது சம்பவ இடத்திற்கு போலீசார் வரவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மூன்று கோவில்களும் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, லெட்சுமி நரசிம்மர் கோவிலும், பிள்ளையார் கோவிலும் ஒரு இடத்தில் இருக்கிறது. கருவாழுடைய அய்யனார் கோவில் ஊருக்குள் அருகே கண்மாய்கரையில் உள்ளது. பிள்ளையார் கோவிலும், லட்சுமி நரசிம்மர் கோவிலும் எங்கள் டீக்கடைக்கு எதிர்புறத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலுக்கும், எங்கள் டீக்கடைக்கும் இடையில் தான் என் கணவர் வெட்டுப்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். டீக்கடைக்கும், கோவிலுக்கும் இடையில் தெருவிளக்கு இல்லை என்றால் சரிதான். கும்பாபிஷேகம் நடைபெற்றதிலிருந்து 48 நாட்கள் கழித்து தான் மண்டல பூஜை நடைபெறும் என்றால் சரிதான். கும்பாபிஷேகம் ஆகம விதிகளின் படி அய்யர் வைத்து யாகம் வளர்த்து நடைபெற்றது என்றால் சரிதான். அந்த யாகத்திற்கு எத்தனை குண்டங்கள் வைத்திருந்தீர்கள் என்றால் ஐந்து. விநாயகர் கோவிலுக்கும், லட்சுமிநரசிம்மர் கோவிலுக்கும் முன்பு தான் குண்டங்கள் வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். தண்ணீர் தொட்டியும், தண்ணீர் டேங்கும் பஞ்சாயத்து கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது என்றால் சரிதான். அந்த தொட்டிகளில் தண்ணீர் ஏற்றுவது அந்த பஞ்சாயத்தின் அலுவலர் தான் ஏற்றுவார் என்றால் மாத்தூரில் இருந்து தண்ணீர் ஏற்றிவிடுவார்கள். தண்ணீர் பைப்பில் பழுது ஏற்பட்டால் பஞ்சாயத்து மூலம் தான் செலவு செய்து சரி செய்வார்கள் என்றால் சரிதான். தண்ணீர் தொட்டியையும், தண்ணீர் சின்டெக்ஸ் டேங்கையும் எதிரி உடைத்ததாக சொல்வதை யார் சரி செய்தார்கள் என்றால் பஞ்சாயத்தில் சரி செய்தார்கள். அது சம்பந்தமாக புகார் ஏதாவது கொடுத்தேனா



P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2025.12.19 19:02:51 +0530

என்றால் இல்லை. ஏன் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை, பஞ்சாயத்தில் தானே கொடுக்க வேண்டும். பஞ்சாயத்தில் செலவு செய்தது சம்பந்தமாக பஞ்சாயத்தில் உள்ளவர்களை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரிதான். பிள்ளையாரை தூக்கி கிணற்றில் போட்டதாக சொல்வதற்கு இரண்டு நபர்கள் யார் என்றால் சொல்லமாட்டேன் என்கிறான். அதுசம்பந்தமாக புகார் ஏதாவது கொடுத்திர்களா என்றால் இல்லை. கும்பாபிஷேகத்திற்கு போலீசாரிடம் அனுமதி வாங்கியிருந்தீர்களா என்றால் நாடகம் போடுவதற்கு அனுமதி வாங்கி இருந்தார்கள். பிள்ளையாரை எதிரி தான் தூக்கி போட்டான் என்று யார் சொன்னது என்றால் எதிரியின் ஆட்களை வைத்து விசாரித்ததில் எதிரி நான் தான் என்று சொன்னான். எதிரி அன்றைய தினத்தில் அவருடைய மனைவியும், மனைவியின் அம்மாச்சியையும் மதுரையில் வைத்து வெட்டியதாக மதுரை கூடல் புதூர் நகரில் ஒரு வழக்கு இருப்பது தெரியுமா என்றால் போலீஸ் ஸ்டேசனுக்கு போன போது சொன்னார்கள். என் கணவர் வெட்டுப்பட்டு குப்புற விழுந்து கிடந்தாரா, மல்லாக்க விழுந்து கிடந்தாரா என்றால் மல்லாக்க விழுந்து கிடந்தார். நான் என் கணவரை பிரட்டி பார்க்கவில்லை என்றால் அந்த பதற்றத்தில் பார்க்கவில்லை. செப்டம்பர் மாதம் 7, 8 தேதிகளில் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை என்றும், யாகசாலை வைக்கவில்லை, காவல்துறை அனுமதி பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் செப்டம்பர் 7, 8 தேதியில் கும்பாபிஷேகம் நடைபெற்றிருந்தால் மண்டல பூஜை அக்டோபர் 26 லிருந்து 28க்குள் தான் நடைபெற்றிருக்க வேண்டும் என்றும், கும்பாபிஷேகமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல, எங்கள் பங்காளி வீட்டில் இறந்துவிட்டதால் மண்டல பூஜை தள்ளிவைக்கப்பட்டது. இந்த சம்பவத்திற்கு ஏதுவாக காவல்துறையினர் சொல்லி கொடுத்ததன் அடிப்படையில் எதிரி மீது குற்றம் சுமத்தப்பட வேண்டும் என்பதற்காக, ஒரு முன்விரோதம் இருக்க வேண்டும் என்பதற்காகவும், பொய்யாக புனையப்பட்டு காவல்துறையினரே எழுதி கொடுத்த புகாரில் நான் கையொப்பம் செய்து போலீசார் சொன்னதன் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி தன் மனைவியை வெட்டிய வழக்கு சம்பந்தமாக மதுரையில் உள்ள கூடல் புதூர் காவல்நிலையத்தில் கைது செய்யப்பட்டு அங்கு இருந்தார் என்றால்



P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:03:02 +0530

சரியல்ல. சா.பொ.ஆ.1 அருவாள் எதிரி பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்து தலைவர் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாக எங்கள் சமூகத்திற்கும், யாதவர் சமூகத்திற்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றும் ஐப்பசி மாதம் இரவு அதிகாலை வேலை என்பதால் இருட்டில் நடைபெற்ற இந்த சம்பவத்தில் யாதவர் சமுதாயத்தை சேர்ந்த நான்கு, ஐந்து பேர்கள் சேர்ந்து என் கணவரை நான்கு, ஐந்து ஆயுதங்களுடன் குத்தி கொன்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல, பஞ்சாயத்து தேர்தல் சம்பந்தமாக பிரச்சனை இல்லை. எதிரி மது அருந்திவிட்டு அடிக்கடி ஊரில் சத்தம் போட்டு வருவதால் எதிரியாக தான் இருக்கும் என்று சந்தேகத்தின் அடிப்படையில் எதிரியை பொய்யாக இந்த வழக்கில் சம்பந்தமில்லாமல் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :**

**இல்லை.**

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.12.19 19:03:14 +0530